# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 92/2023

## வழக்கு சாட்சி :PW2(LW2)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளஞ்சியம் | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | ராஜேந்திரன் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | கோசக்களம் | சமயம் | : | |
| தாலுக்கா | | இலுப்பூர் | வயது | : | 45 |

(1,2 எதிரிகள் ஆஜர் இல்லை .எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 22nd day of october 2024.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோசக்களத்தில் குடியிருந்து வந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா. 1 எனது சகோதரர் ஆவார். கடந்த 19.01.2018 அன்று நான் எனது வயலில் இருந்த போது மணி, சாமிக்கண்ணு, லெட்சுமி க/பெ, மணி, லெட்சுமி, க/பெ.சாமிக்கண்ணு, மணியின் மருமகன்கள் லெக்கணன் என்ற ராஜேந்திரன் , ஆறுமுகம் ,ஆறுமுகத்தின் மனைவி கவிதா , சங்கீதா, சுதாகர் , சாமி, சரிதா, சித்ரா, குமார், குமாரின் தந்தை , ஆகீயோர்கள் சம்பவ இடத்திற்கு வந்து எனது அண்ணனை தேவுடியா மகனே என்று தகாத வார்த்தைகள் பேசி, எனது அண்ணனை முட்டுக்கட்டையால் தலை, இரண்டு கைகள், ஆகீயவற்றில் அடித்தார்கள்.

2. கையால் எனது நெஞ்சில் ஓங்கி குத்தினார்கள். கல்லை எடுத்து எனது அண்ணனின் தலையில் சாமி என்பவர் அடித்தார். என்னையும் , எதிரிகள் தேவுடியா என்று பேசி தகாத வார்த்தைகள் பேசினார்கள். உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள். பிறகு எதிரிகள் நான் அறுவடை செய்து வைத்திருந்த கருதுகளை அங்கிருந்து எடுத்து சென்று விட்டனர். அவசர ஊர்தி மூலம் எனது அண்ணனை விராலிமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நானும் எனது அண்ணனும் அங்கு மூன்று நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றோம். போலிசார் என்னை விசாரித்தனர் .

**எ.த.கு.வி**

இல்லை.